DMK VANNIYAM

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்</u>**

**<u>அசல் வழக்கு எண். 328 /2021</u>**

2023- ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 – ஆம் நாள் செவ்வாய்கிழமை வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW1 - வது நபரின் வாக்குமூலம் ( 1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9- வது பிரிவின் ஏற்பாட்டின் படி ) திரு.கோ.லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாமிநாதன் | தொழில் | : | விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | ரெங்கசாமி | வட்டம் | : | குன்னம் |
| கிராமம் | : | மூங்கில்பாடி | சமயம் | : | – |
| சாதி | : | – | வயது | : | 40 /2023 |

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>**

1. தாவா சொத்திற்கு வடபுறம் பிரதிவாதியின் வீடு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் வடபுறம் பிரதிவாதியின் இடத்தில் நான் சுவர் வைத்துள்ளேனா என்றால் இல்லை நான் எனது இடத்தில் தான் வைத்துள்ளேன். எனது தாத்தா கிரயம் கொடுத்த 1971 ம் ஆண்டின் பத்திரத்தின் படி 25 அடி ஒதுக்கி விட்டுதான் நான் சுவர் எழுப்பி உள்ளேன். நான் சர்வேயர் வைத்து இடத்தை அளந்ததாக எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் . அவ்வாறு சர்வேயர் இடத்தை அளந்தபோது தாவா சொத்தின் வடபுறம் பிரதிவாதியின் இடத்தில் சுவர் எழுப்பி உள்ளது பற்றி குறிப்பிட்டுள்ளார் என்றால் அவ்வாறு கிடையாது. எனது இடத்தில் சுவர் உள்ளதாக தான் குறிப்பிட்டுள்ளார்.

2. எனது இடத்தில் சுவர் வைத்தது போக மீது இடம் இல்லை என்று சர்வேயர் குறிப்பிட்டுள்ளாரா என்றால் வடபுறம் சுவர் தாண்டி 1 1/2 அடி எனக்கு பாத்தியப்பட்ட இடம் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார். எனது வீட்டின் அளவு என்னவென்றால் தென்வடல் 21 அடியும் கீழமேல் 18 அடியும் அதன் பிறகு 15 அடி இடைவெளி விட்டு மேல்புறம் தென்வடல் 44 அடி மாட்டுக்கொட்டகை அமைத்துள்ளேன். எனது வீட்டை சுற்றி 4 புறமும் காம்பவுண்ட் சுவர் எழுப்பி உள்ளேன்.

3. மேற்படி விபரங்களை நான் எனது வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுள்ளோனா என்றால் சொல்லி இருக்கிறேன் . நான் பிரதிவாதி இடத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றாலும் இதை பற்றி சர்வேயரும் குறிப்பிட்டுள்ளார் என்றாலும் மேற்படி ஆக்கிரமிப்பின் அடிப்படையில் உறவினர்கள் பஞ்சாயத்து செய்தார்கள் என்றாலும் இந்த உண்மை தகவல்களை மறைத்து நான் பிரதிவாதி மீது இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . எங்களுக்குள் சமாதானம் ஏற்படும் போது எனது சகோதரர் வெளிநாட்டில் இருந்ததால் அவர் வரும்போது பேசி முடித்துக்கொள்ளலாம் என எழுதி கொண்டோம் என்றால் சரிதான். ஆனால் அதற்கு பின்னிட்டு பிரதிவாதி எனது வீட்டின் கழிவறையை இடித்து விட்டார் . அதனால் தான் நான் வழக்கு தொடுத்தேன்.

4. மேற்படி விபரங்களை நான் எனது வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுள்ளோனா என்றால் இல்லை . எனது வழக்குமூலம் தவறு என்பதால் நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல . இந்த வழக்கு தள்ளுபடி செய்வதற்கு தகுதியானது என்று சொன்னால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMC KUNNAM